பகுதி I

**01) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) அம்மனை வேண்டி ஆடும் நடனம்?
1) காவடி 2) கும்மி 3) கோலாட்டம் 4) கரகம்

2) கண்ட பேதங்களின் எண்ணிக்கை?
1) 4 2) 3 3) 2 4) 1

3) மேலுள்ள பொருட்களைப் பார்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுவது?
1) சமம் 2) உல்லோகிதம் 3) சாசி 4) பிரலோகிதம்

4) ஒரு நடனமாதுவுக்கு இருக்க வேண்டிய இலட்சணம்?
1) பகிப்பிராணன் 2) குரு லட்சணம் 3) பாத்திர இலட்சணம் 4) சபை இலட்சணம்

5) கண்ட பேதம் என்பது?
1) தலையசைவு 2) கண்ணசைவு 3) கை அசைவு 4) கழுத்தசைவு

6) “ரவௌ” என்பது?
1) நகரம் 2) சூரியன் 3) சந்திரன் 4) முகம்

7) ஆரம்ப காலத்தில் “சதிர் ஆட்டம்” என்றழைக்கப்பட்ட நடனம்?
1) பரதநாட்டியம் 2) கதகளி 3) கதக் 4) ஒடிசி

8) தத்தெய் தாம் அடவின் மறுபெயர்?
1) ஊஞ்சலடவு 2) பரவலடவு 3) கோர்வையடவு 4) வீச்சடவு

9) “உத்பிளவனம்” என்பது?
1) நிற்றல் 2) பாய்தல் 3) சுற்றுதல் 4) நடத்தல்

10) மாடப்புறாவைப் போல கழுத்தை அசைப்பது?
1) திருச்சினா 2) சுந்தரி 3) பிரகம்பிதா 4) பரிவர்த்திதா

11) செங்கண், பிளந்தவாய் போன்ற இயல்புகளையுடையது?
1) பாத்திர இலட்சணம் 2) அபாத்திர இலட்சணம்
3) கிண்கிணி இலட்சணம் 4) சபை இலட்சணம்

12) திரியாங்கங்களாக அபிநயத்தில் இடம்பெறுபவை?
   1) பாவம், இராகம், தாளம்
   2) லகு, துருதம், அனுத்ருதம்
   3) நிருத்தம், நிருத்தியம், நாட்டியம்
   4) கஸ்தம், பேதம், அடவு

13) எட்டுவித மெய்ப்பாட்டு உணர்ச்சிகளும் காணப்படும் அபிநயம்
   1) ஆங்கிக அபிநயம்
   2) வாச்சிக அபிநயம்
   3) சாத்விக அபிநயம்
   4) ஆஹார்ய அபிநயம்

14) தொழில்சார் நடனங்களில் ஒன்று?
   1) கரகம்
   2) மீனவ நடனம்
   3) கும்மி
   4) காவடி

15) சிரோபேதங்கள், திருஷ்டி பேதங்களின் எண்ணிக்கை முறையே?
   1) 9, 8
   2) 7, 8
   3) 8, 9
   4) 6, 7

16) ஆங்கிகம் என்பதன் கருத்து
   1) உலகம்
   2) உடம்பு
   3) வார்த்தைகள்
   4) சந்திரன்

17) தெய்யா தெய்யி அடவு அமைந்துள்ள தாளம்?
   1) ஆதி
   2) ரூபகம்
   3) மட்டியம்
   4) ஜம்பை

18) பிரலோகிதம் என்பது
   1) கடைக்கண் பார்வை
   2) இரு பக்கங்களும் பார்த்தல்
   3) உயரப் பார்வை
   4) தூரப் பார்வை

19) வேபது என்பது
   1) நடுக்கம்
   2) கண்ணீர்
   3) களைப்பு
   4) சோம்பல்

20) தத்தெய்தாகா அடவுகளின் எண்ணிக்கை?
   1) 2
   2) 3
   3) 4
   4) 6

**($20 \times 2 = 40$ புள்ளிகள்)**

## பகுதி - II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) அ) திருஷ்டி பேதம் என்றால் என்ன?

ஆ) திருஷ்டி பேதங்கள் எத்தனை?

இ) திருஷ்டி பேதங்களை செய்முறை விளக்கங்களுடன் எழுதுக?

**(2 + 3 + 10 = 15 புள்ளிகள்)**

02) அ) தத்தெய் தாம் அடவுகள் எத்தனை?

ஆ) அவை அமைந்துள்ள தாளம் யாது?

இ) அவ் அடவின் சொற்கட்டைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக?

**(2 + 3 + 10 = 15 புள்ளிகள்)**

03) அ) பின்வரும் கஸ்தங்களின் விநியோகங்களை கருத்துடன் எழுதுக.

1) சந்திரகலா  2) முஷ்டி  3) கபித்தம்

**(3 × 5 = 15 புள்ளிகள்)**

04) அ) பாத்திர இலட்சணங்களை எழுதுக?

ஆ) பரத நாட்டியம் பற்றி 10 வாக்கியம் எழுதுக?

**(5 + 10 = 15 புள்ளிகள்)**